ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

கந்தாடை மன்னப்பங்கார் ஸ்வாமி அருளிச்செய்த

# ॥ தேசிக நூற்றந்தாதி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to Sri T. Raguveeradayal of Tiruppullaani, India, for providing a scanned copy of this document and Smt. Kalyani Krishnamachari of Chicago, USA, for thoroughly proofreading this document.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

# ॥ தேசிக நூற்றந்தாதி ॥

தனியன்

பழவினைகள் தாம் அகல பரவாதி சிங்கத்தின்
கழலிணையைத் தன் நெஞ்சில் கழலாமே எந்நாளும்
தொழுதெழுமன்னப்பங்கார் தூயமலர்த் தாளிணையே
தொழுதெழு நீ நல் நெஞ்சே தொல்வினைகள் தொடராவே

எந்தைமன்னப்பங்கார் என்றைக்கும் தன் நாமம்
சிந்தை தனில் வைத்திடவே செல்வம்சேர் தந்தையொடு
தாயாகிக் காப்பரிந்தத் தாரிணியில் உள்ளாரை
வாயார வாழ்த்து நலம்

வேதமுடித் தேசிகனே! வேதியர் குலத்தரசே!
சாதுசனங்களுக்குத் தாவளமே போதமரும்
நின் அடியை என்றும் நினைந்திருப்பார் பாதம் என்தன்
சென்னிதனில் சூடும் மலர் (1)

மலர்மகள் கோன் தாள் இணையை மன்னியிருப்பார்கள்
சிலர் அவரால் செய்கருமம் என்னாம் மலம் அறுசீர்
வேதாந்த தேசிகனை வேறு ஆகாதேத்துவார்
பாதாம் புயம் நமக்குப் பற்று (2)

பற்றொன்றும் இன்றிப் பராங்குசனையே பற்றும்
சித்தம் உடை வேதாந்த தேசிகனை குற்றம் இல்லா
அன்பால் அடைபவர்க்காளாகும் அன்பரே
என்பால் இருப்பர் இசைந்து (3)

இசைந்தேன் மனம் இவரை ஏத்த எப்போதும்
கசிந்துகரையும் உளம் என்செய்கேன் பசுந்துளவ

மாலையான் தன்னிலும் மன்னினரே வண்டறையும்
    சோலை சூழ் தூப்புல் இறை (4)

இறையும் எமக்காய் இருள் அகற்றும் தேசாய்
    கறையில்குணம் கொள் கடவுளோனாய் மறையனைத்தும்
வாழ்வித்த வாதியர் சீயம் இவ்வையகத்தில்
    ஆழ்துயர் எல்லாம் அறுக்கும் ஆய்ந்து (5)

ஆய்ந்த புகழ் மங்கையர் கோன் அம்புயத்தாள் இணையில்
    சாய்ந்த மனத்தராய்த் தம்மடியார்க்கு - ஈய்ந்த
பெருங்குணத்தர் எம்மைப் பெருகும் அருளால்
    விரும்புவர் வேதாந்த குரு (6)

குருமா மணியே குலவுவரை மார்பன்
    திருமாமகள் கணவன் தன்னைத் தருவானாய்
நின்றாலும் என் வாக்கே நீள் சோலைத் தூப்புல் வரும்
    குன்றாக் குணத்தனையே கூறு (7)

கூறாது நாவேறு கொண்டு பிறவற்றை நெஞ்சம்
    தேறாது சென்னி வணங்காது - சேறுவாரும்
நீள்வயல் சூழ் தூப்புல் நகர் நின்மலனார் தேசுவுடைய
    தாள் அல்லாது தொழா தோள் (8)

தோள் ஆயிரமும் துணித்தன்று வாணன் தன்
    மாளாத செல்வத்தை மாற்றினான் தான் என்றும்
தான் வணங்கி யான் வணங்கத் தன்னை அளித்தருளும்
    பொன் அருளால் தூப்புல் வள்ளல் (9)

வள்ளல் மணிவண்ணன் மாயன் பவக் கடலின்
    அள்ளல் அழுந்தும் எமை ஆதரித்து கள்ள மனம்
தீர்த்துத் தன் சேவடியைச் சிந்திக்கச் செய்வதற்கே
    பார்த்துதித்தான் தூப்புல் பரன் (10)

பரன் நாரணன் அவன் பாதத்திற்காட்செய்கை
    உரம் இவ்வுயிர்கட்கென்றோரார் - சிரமத்தை



www.prapatti.com

தீர்க்கவே வேதாந்த தேசிகனாய் வந்துதித்து
மார்க்கம் இதென்றுரைத்தான் மால் (11)

மாலாய் அடியவர் பால் மாநிலத்தில் வந்துதித்த
நால்வேத மெய்ப்பொருளாம் நாரணனும் - சால
அருள் செய்த வேதாந்தாரியரோடொவ்வான்
அருள் அனைத்தும் ஈங்ககற்றியே (12)

அகற்றி வினை அனைத்தும் அந்தமில் தம் சீரால்
சகத்தில் சதிராக எம்மை உகப்புடனே
உய்விக்கும் வேதாந்த தேசிகராம் உத்தமரை
வைம்மின் மனம் தன்னில் வைகல் (13)

வைகல் கவிவாதி சிங்கமறையவரை
கைகலந்து நாமம் கருதினால் - செய்கருமம்
ஈதொப்பதில்லை இங்கிப்படியே அங்கம் என
சாதுசனம் காட்டும் சதிர் (14)

சதிர் உடையோம் யாம் என்றும் தம்மை எண்ணியிங்கே
எதிர் எமக்கு யார் என்றும் எண்ணி - மதி இல்லா
மானிடர்கள் அந்தோ மயங்குவதே வாதிசிங்கம்
தான் இருக்க இங்கே சதிர்த்து (15)

சதிர்த்தார் அவர் காண்மின் தாரணியின் மீதில்
எதிர்த்தாரும் இப்பவம் நீங்க மதித்தார்
கவிவாதி சிங்கத்தைக் காதலுடன் கண்டு
புவியிடத்து புண்ணியரானார் (16)

ஆனார் இவர் ஆர்தாம் அந்தமில் பேரின்ப
வான் நாட்டமரரோ தேன் ஆரம் மற்றவரோ
பங்கயத்தாள் நாதன் போல் பாடும் புகழுடைய
எம் கவிஞர் சிங்கத்தின் பால் (17)

இன்பம் பெறலாம் இமையோர் தம் நற்பதமும்
அம்புவியோடாளலாம் அன்புடனே செம் பவள

www.prapatti.com

வாயான் மலர்ப்பதத்தான் வண்மையுடை வேதாந்த
தேசிகனைச் சிந்திப்பார்க்கின்று (18)

இன்று நிகமாந்த தேசிகனை எண்ணுவார்
ஒன்றும் அடையார் உறுதுயரம் குன்றெடுத்த
மாயன் மலரடிக்கீழ் வாழ்ச்சி பெறுவரே
மாயும் வினை அனைத்தும் மற்று (19)

மற்றொன்றும் சேரா மனக்கவலை மானிடர்க்கு
சித்தம் தெளியும் சிறப்புடனே - குற்றமில் சீர்
தூப்புல் நகர் வந்துதித்த தூய மனத்தரையே
சேர்ப்பரேல் சிந்தை தனித்தே (20)

தேறும் மனக்கலக்கம் சிக்கெனவாம் தேசும்
மாறும் மறம் அனைத்தும் வண்புகழோர் - கூறும்
குணத்தன் குளிர்சோலைத் தூப்புல்நகர்க் கோமான்
குணத்திற்குருகும் என் நெஞ்சு (21)

நெஞ்சு நெகிழ்ந்து நினையாமல் மற்றொன்றை
உஞ்சும்படியாக உள் அடக்கி வெஞ்சுடரோன்
சோதியெனத் தோன்றும் தொல் புகழ்சேர் தூப்ப்ல்நகர்
ஆதியையே காண்பர் அன்பர் (22)

அன்பராய் ஆதரிக்கும் ஆரியர்காள் போற்றுமின்
இன்பமிகு வேதியர்கள் ஏத்தவே - அம்புவியில்
வந்துதித்த வள்ளல் எதிராசன் வண் புகழே
சிந்திக்கும் தூப்புல் நகர்ச் சிங்கம் (23)

சிங்கமுகத்தானை திங்கள் பல காட்டும்
அங்கம் உடையவனை ஆதரிக்கும் - எங்கள் பிரான்
தூப்புல்வரும் ஆரியனைத் தோத்தரியா மானிடர்க்கு
காப்பு அனைத்தும் ஆகும் கடை (24)

கடைந்தான் கடலைக் கடல் வண்ணன் முன்னம்
இடந்தான் பின் ஏனமாப் பூமி - அடைந்தார்



www.prapatti.com

வருத்தம் அறக் காக்குமே வையத்தருளால்
    திருத்தம் உடைத் தூப்புல் - வாழ் தேவு (25)

தேவர் முனிவர்களும் சித்தர்களும் பத்தர்களும்
    பூவின் மழைபொழிந்து போற்றவே - தாவி
உலகளந்த மாலை உணர்ந்துகக்கும் தூப்புல்
    குலகுருவே எங்கள் குரு (26)

குருவும் குலத்தரசும் குற்றம் இலாச் சுற்றும்
    தருமமும் தாய் தகப்பனாரும் - வரு புனல்சூழ்
தூப்புல்வரும் தூய்மறையோன் தொல்லருளே என்றிந்தக்
    கோப்புடையோம் யாம் என்றே கூறு (27)

கூறி முடியாக் குணத்தனை நல் நெஞ்சமே
    நாறு துழாயானை நண்ணுமோர் வீறு உடைய
தூப்புல் அனந்தாரியனார் தொல் புகழ்சேர் மைந்தனை
    மூப்புவரும் முன்னமே பற்று (28)

பற்றி அடியிணையை பாவித்து நல்வடிவை
    சுற்றிக் குணங்களையே சொல்லி பத்தியுடன்
நிற்றியேல் நீ மனமே நீள் வயல் சூழ் தூப்புல் இறை
    முத்தி அருளும் முயன்று (29)

முயன்று முகுந்தன் மலரடிமேல் அன்பால்
    பயம் துறந்தார் பார்த்திருக்க முன்னம் - உயர்ந்த
துணிவான் மணிமாடத் தூப்புல்வந்த சோதி
    பணிவோம் யாம் போமே பயம் (30)

பயமாயின மாயும் பாவங்கள் வீயும்
    சயம் அனைத்தும் தாமே கைகூடும் - துயரொன்றும்
வாராது வண்மையால் வாதிசிங்கம் இங்குதித்த
    சீர் ஒன்று சிந்திப்பரேல் (31)

சிந்தித்து வாதிசிங்கத் தேசிகர் தம்வடிவை
    வந்தித்தவர்மலர்ப் பாதத்தை புந்தியில் வைத்து



www.prapatti.com

உள்ளுவார் உள்ளத்துறையுமே உம்பர் கோன்
தெள்ளியார் சிந்திக்கும் தேசு (32)

தேசுடைய ஆழியும் சிங்கமும் கையேந்தி
வாச மலர்த்துழாய் வாழ்மார்பன் காசினியில்
காண நின்றாலும் கவிவாதி சிங்கனையே
காணக் கருதுமென் கண் (33)

கண் அவரையே காணும் காது அவர் சீரே கேட்கும்
எண்ணம் அவர் தொல் புகழே எண்ணும் - திண்ணம்
கவிவாதி சிங்கக் கடவுளையே நண்ணி
அவியாத காதல் அடைந்து (34)

அடைந்து மடநெஞ்சே அன்பால் அவனை
கிடந்து மலரடியின் கீழே தொடர்ந்தென்றும்
தூயமலர்ச் சோலைசூழ் தூப்புல்நகர் வந்துதித்த
மாயவனையே வணங்கிவாழ் (35)

வாழ்ச்சி இது நெஞ்சே வாதிசிங்கத் தேசிகர் தம்
காழ்ச்சிவுனக்குண்டா மேல் கன்மம் - தாழ்ச்சியொன்றும்
சாரா வகை தீரும் சன்மத்துயர் தொலையும்
சீரார் சிரீதரனைச் சேர்ந்து (36)

சேரும் புகழோன் திருவத்தியூர்வரதன்
காரொத்த வண்ணன் கழலிணையைத் - தார்மன்னும்
சென்னியில் வைத்தென்றும் சிறக்கு மணி தூப்புல்
மன்னனை என் நெஞ்சமே வாழ்த்து (37)

வாழ்த்திக் கவிவாதி சிங்கன் மலரடியை
தாழ்த்தித் தலையை அதன் கீழே - சூழ்ந்தென்றும்
தொல் புகழே சிந்திப்பார் சூழ்வினையை மாற்றுவரே
நல்வினையாம் நானிலத்தில் ஈது (38)

ஈதே உயிர்க்கிதமும் எத்தவமும் எப்பொருளும்
ஈதே பேர் இன்பம் மிகுவீடும் தீதறு சீர்த்

www.prapatti.com

தூப்புல்நகர் வந்துதித்த தொல் புகழ்சேர் ஆரியன் பேர்
கோப்புடனே கூறுவதாம் உற்று (39)

உற்று நின் சேவடியை உய்வதோர் காரணத்தால்
பற்றொன்றும் இன்றிப் பவக்கடலின் - தொத்தறுப்பார்
வேதமுடித் தேசிகனே வேத விழுப்பொருளாம்
மாதவனை நண்ணுவரே மன் (40)

மன்னு மறை அனைத்தும் மாகுருவின்பால் கேட்டாங்கு
உன்னி அதன் உட்பொருள்கள் அத்தனையும் துன்னு புகழ்
பெற்றாலும் தூப்புல் பெருமானை நண்ணாதார்
கற்றாரே காசினியில் வம்பு (41)

வம்பார் குழல்மாதர் வான்கலவி ஆசை தன்னால்
அம்பாய பட்டலந்து நின்றேனை தன் பாத
தாமரைமேல் காதலையே தந்தடிமை கொண்டருள்வான்
தூயமனன் தூப்புல் அவன் இன்று (42)

இன்றுமுதல் யாவரையும் எண்ணேன் இறை என்று
சென்றுசேண் நாடர் மிகப்போற்ற குன்றெடுத்த
வேங்கடமால் வித்தகத்தால் வேதாந்த தேசிகனாய்
ஈங்குதித்த ஏற்றம் அறிந்து (43)

அறிந்தறிந்து நல் கலைகள் ஆய்ந்தப்பொருளில்
செறிந்தபெரும் சிந்தையராய்ச் செவ்வே - சிறந்த புகழ்
தூப்புல்நகர் வந்துதித்த தூய்மனத்தன் பாதமெ
காப்புவென்பார் காப்பரென்றும் (44)

என்றுமினி எமக்கோர் இன்பக் கதியிதுவே
குன்றம் எடுத்த பிரான் குற்றமில் சீர் - நன்றாக
ஏத்தும் கவிவாத சிங்கரையே எப்பொழுதும்
நாத்தழும்ப நாம் உரைப்போம் நன்று (45)

நன்றிதுவாம் தீதாதுவாம் என்றென்று நன்கறியாது
இன்றறுதியாகவே என் நெஞ்சம் - வென்றிமிகும்

வேதமுடித் தேசிகனை வேறாக ஏத்திய பின்
    தீதில்மதி பெற்றதிப்போது ஈது (46)

ஈதேயாம் வேண்டும் பயன் இதுவே சாதனமும்
    ஈதேமற்றெல்லாம் எமக்கின்று சாதுவராய்
தண் புனல்சூழ் தூப்புல் கோன் தாள் இணையே நண்ணுவார்
    மன்மிசைவாழ் வானவரே மற்று (47)

மற்றொன்றும் யான் வேண்டேன் மானிடர்காள் மாநிலத்து
    குற்றம் இல்சீர்த் தூப்புல்நகர்க் கோமான் தன் - எத்திசியும்
கொண்டாடி ஏத்தும் குணங்களுக்கே எஞ்ஞான்றும்
    தொண்டானேன் தோற்றா வினை (48)

வினை அனைத்தும் தீருமே வேமே துயரம்
    மனைமனைவி ஆசையும் மாளுமே - தனை உணர்ந்து
செங்கமல நாபனையும் சேரலா சூமவாதி
    சிங்கரைத்தன் சிந்தை தனில் சேர்த்து (49)

சேர்ப்பரேல் தம் நெஞ்சில் சிக்கெனவெ சீராரும்
    தூப்புல்நகர் வந்துதித்த தூயவனை காப்பர் அவர்
காசினியில் உள்ளாரைக் கன்மம் அறுத்திட்டு
    மாசில்மனம் எய்தவும் வைப்பார் (50)

வைப்பார் மனம் தன்னில் மாநிலத்து மாதவத்தோர்
    எப்பொழுதும் எங்கள் பெருமானை அற்புதமாம்
தேசுடைய வேதாந்த தேசிகனே சீர் மிகுந்த
    மாசுவில் மதிவுடையோர் வாழ்வு (51)

வாழ்விதுவே உம் தமக்கு வம்மின் உலகத்தீர்
    தாழ்வு எங்கும் வாராது தளர்ச்சியில்லா சூழ்வினைகள்
சேரச் சிதைந்திடுமே திண்ணம் இது வாழ்த்துமினோ
    ஆரணத் தேசிகரை ஆய்ந்து (52)

ஆய்ந்துரைக்கலாம் மணிகள் ஆழ் கடலுள் இத்தனை என்று
    ஆய்ந்துரைக்கலாம் அமரர் கோன் புகழும் - ஏய்ந்தசீர்

www.prapatti.com

வேதமுடித் தேசிகனார் வீறுடைய வன்குணங்கள்
ஓதமுடியுமா எவர்க்கும் ஓர்ந்து (53)

ஓரார் அறத்தை உணரார் பெரும்பொருளை
பாரார் பயனான இன்பத்தை சீராரும்
வீட்டையும் வேண்டாரே வேதாந்த தேசிகர் தம்
பாட்டினைப் பாடும் அவர் (54)

அவரவர் தம் தம் அறிவளவின் மாலை
தவநெறிகளால் வணங்கிச் சார்வார் - எவரேலும்
தூயமறையோர் வணங்கும் தூப்புல்நகர்க் கோமானையே
அறிவான் மேவுவரே இங்கு (55)

இங்கிருந்தால் ஏதம் என் எம்தமக்கு வாதிசிங்கர்
செங்கமல பாதமும் சீர்வடிவும் அம்கமலக்
கைகளும் வாயும் கருணைமிகு கண் இணையும்
கைகனி போல் காணக்கூடில் (56)

கூடில் அவர்குணத்தைக் கூறவே எம்தமக்கு
தேடில் அவர் பதத்தைச் சென்னி தனில் - சூடத்
துலங்குவொளிசேர் தூப்புல்வரும் தூயோன் அருளால்
வலங்கொள் பதம் எய்தலாம்வான் (57)

வானில் திகழும் மதியோ கதிரவனோ
ஊனமிலா ஓமத்தொளி அழலோ - மாநிலத்தில்
சோதியவை மூன்றும் ஒன்றாய்த் தோன்றினவோ
தூப்புல்நகர் வாதிசிங்கத் தேசிகராய் வந்து (58)

வந்து கருணையால் வானவர் கோன் வன் படைகள்
ஐந்தும் அனைத்துலகுய்யவே செந்தார்க்
கவிவாதி சிங்கராய்க் காசினியைத் தேசின்
தவிவின்றித் தாங்கின தாம் (59)

தாங்கி உலகனைத்தும் தான் அருவாய் நின்ற பிரான்
ஓங்கு புகழ் வேங்கடக்கோன் உம்தமக்கு - தீங்கேதும்



www.prapatti.com

வாராத வண்ணம் இவ்வாதி சிங்க ராயினான்
பாருலகீர் பாங்குடனே வந்து (60)

வந்தென்தன் வன்நெஞ்சில் மன்னி இருந்தானை
எந்தை எதிராசர் இணை அடியை கொந்தலரும்
சோலைசூழ் தூப்புல்நகர் வந்துதித்த தூயவனை
காலமெல்லாம் காண்பன் களித்து (61)

களிக்குமது என்றுகொலோ கண்களால் கண்டு
துளிக்கும் நறுந்துழாய்க் கண்ணி - ஒளிக்கொளும்
அண்டர்கோன் என்ன அடியார்க்கருள் புரியும்
கொண்டலார் தூப்புல் கோவை (62)

கோவைக்கனி ஒத்த வாயும் குளிர் விழியும்
தாவம் தவிர்க்கும் முறுவலும் - பாவம் தீர்
வேதமுடித் தேசிகன் தன் மெய்யொளியும் மேவாதார்
சாதுவரைக் காணார் தளர்ந்து (63)

தளர்த்தி மற்றொன்றத் தரித்து நீ நெஞ்சே
கிளர்த்தியுடன் கேடில் சீரானை அளத்தற்கு
அரியானை அம்மானை அன்புடனே தூப்புல்
பெரியானை எப்பொழுதும் பேசு (64)

பேசுமினா கூச்சம் இன்றி பேரின்பம் வேண்டினீர்
தேசுடைய செந்தாமரை அடியை - பாசமொன்றும்
நில்லாது தூப்புல் நிமலனையே நாள்தோறும்
சொல்லாதார் சூழ்வினை தோற்றார் (65)

தோற்றம் தவர்க்கேதும் தொல்வினையே எஞ்ஞான்றும்
மேல் தான் வருவதும் ஒன்றுண்டோ ஆற்றாத
ஆர்வத்தால் வேதமுடி ஆரியனைப் பற்றுகையே
சீருற்ற வீட்டின் சிறப்பு (66)

சிறப்பும் உயிர்க்கிதுவே சேமமும் ஈதே
அறம் பொருளும் ஆம் வீடும் ஈதெ மறப்பின்றி

மன்னியசீர் தூப்புல்வரும் மாமறையோன் பாதத்தை
    சென்னிதனில் சேர்ப்பதுவே செவ்வு (67)

செவ்வியராய்ச் செங்கண்மால் சேவடியைச் சேவிப்பார்
    அவ்வப் பயனை அடைந்திடுவார் அவ்வாறு
சிந்தை தனில் தூப்புல்வந்த தேசிகனை நண்ணுவரேல்
    அந்தமில் வீட்டின்பம் அவர்க்காம் (68)

அவர்க்காம் தெளிவிசும்பில் அந்தமில் பேரின்பம்
    எவர்க்கேனும் இத்துணிவுவுண்டாகில் எவர்க்கும்
கவிவாதி சிங்கர் அல்லால் காப்பார் மற்றில்லை
    அவமாம் மற்றோர் பேசும் சொல் (69)

சொல்லார் சுருதிமுடித் தேசிகன் தொல் புகழை
    எல்லா இடத்திலும் எப்பொழுதும் - நல்லார்கள்
கோட்டி தனில் கூட்டீரேல் கோதில்மனத் தீர் உம்மைக்
    காட்டில் நிலவாக்குவதே கா (70)

காரீரும் ஆருயிரைக் கைகழிந்து போகாமே
    பாரீர் உலகியலைப் பாங்குடனே வாரீர்
சுருதிமுடித் தேசிகனைத் தூய்மனத்தராகிப்
    பரிவுடனே பாவித் திரும் (71)

இரும் பொழில்சூழ் தூப்புல் வருமெம் பெருமானை
    அரும்பெறலா வானைமாற்றார்க்கு - விரும்புவார்க்கு
ஆராவமுதை அனைத்துலகும் போற்றி செயும்
    சீரானைச் செப்புதல் சேமம் (72)

சேமங்கொள் தூப்புல் திருவேங்கடமுடையார்
    தாம் அன்பினால் செய்த நல்கலைகள் - ஆமென்று
அறிந்தார் அறிவார் அறியாதார் இங்குப்
    பிறந்தார் பெரும்பாரமாய் (73)

பெரும்பாரம் பூமிக்குப் போக உதித்திங்கு
    அரும்பாவம் எம்தமக்குத் தீர்த்த - சுரும்பாரும்



www.prapatti.com

நீள் சோலைத் தூப்புல் நிமலனார் தம்முடைய
    தாளே நமக்கென்றும் சார்வு (74)

சார்வு நமக்கென்று சாதுசனம் தாமேத்தும்
    சோர்வில் தோதாரம்மை மைந்தனாம் - சீர்மிகுந்த
வாதிசிங்கத் தேசிகனை வாழ்த்தாத மானிடரே
    சாதிகளில் ஒன்றிலும் கூடார் (75)

கூடார் வினைகளுடன் கொண்டிரார் துன்பத்தை
    தேடார் சிரீதரனை அன்றியே நாடாரே
சீர்மல்கு வேதாந்த தேசிகனைப் போற்றியே
    பாருலகில் பாங்கொடு வாழ்வார் (76)

வாழ்வார் அவர் எங்கும் வையகத்தார் போற்ற
    தாழ்வுவொன்றும் இன்றித் தளர்ச்சியாச் சூழ்வினைகள்
வேருடனே போக்குவரே வேதாந்த தேசிகன் பேர்
    சீருடனே சிந்திப்பரேல் (77)

சிந்தித்தடங்குமோ செங்கமலப் பூவுதித்த
    அந்தமில் சீர் மங்கை தனக்கன்பன் கந்தமிகு
தண்துழாய்த் தார்மார்பன் போலத் தமர்க்கென்றும்
    கொண்டல் கவிவாதிசிங்கக் கோ (78)

கோவாகி வானவர்க்கு குற்றமிலாத் தொல்லருளால்
    ஓவாது வேங்கடத்தில் ஓங்கி நின்றாவாவென்று
எம்மை அளிப்பான் இரும் பொழில்சூழ் தூப்புல்வரு
    செம்மையுடை வாதிசிங்கத் தேர்வு (79)

தேவர் அசுரர்களும் தேசுவுடைய வானவரும்
    பூவுலகில் புண்ணியரும் போற்றிசெய மூவுலகுக்கு
ஈசன் எழில் வேங்கடக் கோனேரார் திருமணி இக்-
    காசினியைக் காக்குமே வந்து (80)

காக்கும் என்றும் எம்மைக் கருக்குழியில் வீழாமே
    தீர்க்கும் வினை அனைத்தும் சேராமே - ஏற்கும்

பெரும் புகழோன் ஈசன் பிறந்தான் சிறந்த
சுரும்பமரும் சோலைசூழ் தூப்புல் (81)

தூப்புல்நகர் நாதன் துலங்கொளிசேர் சேவடியே
காப்பென்னக் கன்மம் கழியுமே மூப்பில்லா
இன்பம் பெருகுமே இப்புவியில் எவ்வுயிர்க்கும்
துன்பம் அது தொலையுமே (82)

தொலையாத தொல்வினைகள் சூழ்பவ ஆவி
சிலையால் சிதைக்கவற்றோ இங்கு துலையில்லாக்
கோதுவில் புகழ் ஆரியர்கள் கூறும் குணம் மிக்க
வாதிசிங்கர் மன்னருளால் அன்று (83)

மன்னருளால் வாதிசிங்கர் இங்குரைத்த நல்கலைகள்
உன்னி உணர்ந்திட வல்லவர்கள் துன்னும்
சுருதிமுடி உட்பொருளைச் சோராதறிவர்
அருமையாம் மற்றோர் அறிவு (84)

அறிவரோ ஆழ்வார் அருமறையின் சீரை
நெறிதான் நினைந்திடவல்லாரோ சிறியராய்
வேதமுடித் தேசிகன் தன் வீறுடைய நல்கலைகள்
ஓதி உணராதவர் (85)

உணரார் மறைப்பொருளை உத்தமரைச் சேரார்
பணவாள் அரவணைப் பள்ளி புணர்வானைப்
போற்றியெழார் அந்தோ புல்லியராய் வாதிசிங்கர்
மாற்றம் அறியாமனிசர் மாய்ந்து (86)

மாய்ந்துமாய்ந்திவ்வுலகின் மன்னிய பல் பிறப்பில்
தோய்ந்துழல்வீர் சொல்லுகேன் வம்மினோ ஆய்ந்தொருகால்
வேதமுடித் தேசிகனார் மெய்யுரையை நண்ணினால்
பாதகங்கள் ஓடும் பறந்து (87)

பறக்குமே பாவம் பவக்கடலும் வற்றும்
இறக்குமே இவ்வுலகில் துன்பம் - மறப்பின்றி



www.prapatti.com

வாதிசிங்கர் வார்த்தைகளை வைப்பரேல் தம் நெஞ்சில்
கோதில்குணம் கொண்டிருக்கலாம் (88)

கொண்டிருக்கலாமே குறை கடல்சூழ் வையகத்தை
விண்தலத்தில் வீற்றிருக்கலாமே தான் தொண்டுபட்டு
தொல் புகழ்சேர் தூப்புல்வந்த தூய்மறையோன் செய்தகலை
அல்லும் பகலும் அறிந்து (89)

அறிந்து மறையோர் ஆரணத்தில் பொருளை
சிறந்த மனத்தில் சேமித்து புறம் தொழார்
வன் பொழில்சூழ் தூப்புல்நகர் வந்துதித்த வாதிசிங்கர்
எண்பெரிய சீர்மொழிகண்டார் (90)

கண்டார் கரையை கடந்தார் பவக்கடலை
அண்டாத ஆர்வம் அடைந்திட்டார் - வண்டாரும்
கொந்தலர் பூந்தூப்புல்வரும் குற்றமில் வாதிசிங்கர்
செந் தமிழ்நூல் சிந்தித்தவர் (91)

சிந்தித்தவர்மொழியை சிந்தாதே நாள்தோறும்
வந்தித்தவர்மலர்ப் பாதத்தை அந்தம் இல்சீர்
தூப்புல்நகர் வந்துதித்த தூய்மறையோர் தொல்லருளால்
கோப்புடனே யாம் களித்தோம் இன்று (92)

இன்றறிந்தோம் எம்தமக்கோர் இன்பமிலை ஈதன்றி
இன்று அறிந்தோம் மெய்த்தவமும் ஈதென்றே குன்றாத
தொல் புகழ்சேர் தூப்புல்வாழ் தூயன் மலர்ப்பதத்தை
நல்குவதே நாளும் பிற (93)

பிறவித்துயர் அறும் பேரின்பம் சேரும்
குறையொன்றும் இல்லாக் குணத்து - மறையவர்கள்
போற்றும் இந்த வாதிசிங்கப் புண்ணியரை அல்லாது
தோத்தரித்துச் சொல்லாதவர்க்கு (94)

சொல்வதும் உன் நாமம் தொழுவதும் உன் பாதமலர்
நல்குவதும் உன்னுடைய நல்குணமே தொல்லருளுக்கு

எம்மையிலக்காக்கி ஈனமாம் எம் பரிசு
செம்மை செய் தேசிகனே இன்று (95)

இன்றென்தன் பாக்கியமோ ஏரார் வரதகுரு
நன்றான தொல்லருளோ நாரணன் தன் - குன்றாத
நல்வினைவோ நான் இன்று வாதிசிங்கர் நல் அடியை
மன்னுமனம் பெற்றவிதம் (96)

தம்மை வணங்கினர்க்கெஞ்ஞான்றும் தம்முடைய
நம்மை அளிக்கும் இராமானுசர் போல் - உம்மை
வணங்கும் அடியேற்கும் வாதிசிங்கரே நீர்
இணங்கும் வகை அருள்வீர் இன்று (97)

என்றும் எனக்கு நீ நன்றெடுத்த தாய் தந்தை
நன்றளிக்கும் நல்குருவும் நல்கதியும் - குன்றெடுத்த
மாயனைப்போல் மற்று மறைமகுட தேசிகனே
தூயமனத்தோர்க்கு நீ தேவு (98)

தேவரொடு முனிவர் தேசுடைய யோகியரும்
மேவி அடிபரவும் மெய்த்தவனே காவிமலர்க்
கண்ணார் மயக்கில் கலங்கா வகை அருளாய்
கண்ணாளா! தூப்புல் கனி (99)

கனிவாய்க் கவிவாதி சிங்கர் இப்பார்க்கோர்
நுனியார் திகிரி போல் நூக்க பனிபோல
கூறாயிற்றன்றே குமதிகள் தம் கோதுகலம்
வீறுவுடைத்தே வேதமுடி (100)

॥ சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com